Tiaano® Innovation In Inert Metals

# Ti Anode Fabricators Pvt. Ltd.

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

## "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

### GOAL 2013-2014

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

### TESTIMONIALS

- **Customers…**
  - Up to Oct. 13 : 726 Nos.
  - Up to Sep. 13 : 717 Nos.
- **Performance Oct. 13 …**
  - Turnover growth : 6 %
  - Employment growth : 0 %
  - 100% Attendance : 26.14%

### MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Ms. J. Vanajambika

### OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks

Hydro Gen – HHO Generators

Titanictrade – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSC Pattern School)

### ACHIEVEMENT




## தாகம்

**1.** இரண்டு நண்பர்கள் நடந்து சென்று கொண்டிருந்தார்கள், வழிபாதையில் அவர்களுக்குத் தாகமெடுத்தது சாலையோரத்தில் இருந்த ஒரு வீட்டில் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டார்கள், அந்த வீட்டிலிருந்த பாட்டி, ஒரு குவளையில் கொஞ்சம் மோர் கொண்டு வந்து கொடுத்து விட்டுச் சொன்னார்கள். பிள்ளைகளே, வீட்டில் தண்ணீர் முற்றிலும் தீர்ந்துவிட்டது, தண்ணீர் எடுப்பதற்காக என் மகள் தொலைவில் உள்ள கிணற்றிற்குச் சென்றிருக்கிறாள், அவள் வருவதற்கு நேரமாகும். எனவே, இப்போது இருக்கும் கொஞ்சம் மோரைக்குடித்து தாகம் தீர்த்துச்செல்லுங்கள்.

**2.** நண்பர்களில் முதலாமவன் அந்த மோர்க்குவளையைப் பார்த்துவிட்டுச் சொன்னான், இந்தக்குவளையில் பாதியளவு மோர் இல்லையே, எங்கள் இருவருக்கும் இது எப்படிப்போதும்? பிறகு "அந்தக் குவளையை வாங்கி பார்த்த இரண்டாமவன் சொன்னான்". "இந்தக்குவளையில் பாதியளவு மோர் இருக்கிறது பாட்டி! இப்போதைக்கு எங்கள் தாகத்தைத் தீர்ப்பதற்கு இது போதும், உங்களுக்கு மிகவும் நன்றி, நாங்கள் போகுமிடத்தில் எங்காவது போதுமான அளவு நீர் பருகிக்கொள்வோம் என்று கூறினான். அந்த பாட்டி, "போதும் என்பவனுக்கு எல்லாமும் கிடைக்கும்! ஏன்று ஆசிர்வதித்து அவர்களை அனுப்பினார்கள்.

**3.** அந்தப்பாட்டி சொன்னது அற்புதமானதொரு வார்த்தையாகும் எவ்வளவு கஷ்டத்திலும் நம்பிக்கையைக் கைவிடாமல், "நமக்கு வெற்றி உண்டு, நமக்கு நல்ல வாழ்க்கை உண்டு! என்ற உறுதியுடன் போராடத் துணிபவரிடம் எல்லா நன்மையும் வந்தடையும். "எனக்கு எதுவுமே இல்லை, எதுவும் கிடைக்காது" என்று சோர்ந்து அமர்கிறவனிடத்திலிருந்து, அவனுக்குச் சொந்தமானதும் போய்விடும். அவைகள் நமக்குள் இருக்கும் வரைக்கும் நம்மை எந்த ஒரு நல்ல விஷயத்தையும் செய்யவிடாமல் தடுக்கும். ஆனால் நம்மிலிருந்து அவைகளை அகற்றும் போது நமக்கே தெரியாமல் நமக்குள்ளிருக்கும் தனித்திறமைகள் அனைத்தும் வெளிப்படும்!

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

## உழைப்பே உயர்வானது

- உழைக்கும் வர்க்கத்தினருக்கு வணக்கம் செலுத்துவோம். வீணாக உண்டு களித்திருக்கும் சோம்பேறிகளை நிந்தனை செய்வோம்.
- தலை உச்சியின் மீது வானமே இடிந்து விழுந்தாலும் அச்சம் கொள்ளத் தேவை இல்லை. உள்ளத்தில் அச்சம் நீங்க வேண்டுமானால் அன்பு உணர்வை வளர்க்க வேண்டும்.
- விருப்பு வெறுப்பை வென்று விட்டவனுக்கு மட்டுமே ஞானப்பார்வை உண்டாகும். அவன், சாஸ்திரங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குவான்
- உழைப்பவர்கள் தற்காலிக வெற்றி கிடைத்தவுடன் தடைபட்டு நின்று விடக்கூடாது. மேலும் முயற்சியுடன் உழைத்து நிலைத்த வெற்றி பெற வேண்டும்.

Compiled By : Mrs. K. ShreeMadhi
Administration

## FUNCTIONAL WISHES



**Happy Chirstmas**

**25th December**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel:22294565 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mrs. M. Indumathy** **06th Dec**
Purchase

**Mr. R. Dayanidhi** **08th Dec**
Production

**Mr. Velappan Jeyakummar** **12th Dec**
Managing Director

**Best Wishes from Tiaano Employees**

Some people come
In your life as
Blessings.

Some come in your
Life as lessons.



\- **Mother Teresa**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

ஒரு கடிகாரக் கம்பெனிக்கு வெளியூர் வாடிக்கையாளர் கடிதம் எழுதினார். ‘‘எனக்கு நீங்கள் அனுப்பிய கடிகாரத்தின் கண்ணாடி உடைந்திருக்கிறது. திரும்ப அனுப்பவா? சரி செய்து கொடுங்கள்’’என்று இரண்டே நாட்களில் கம்பெனிப் பதில் எழுதியது. ‘‘உங்கள் ஊரிலேயே அதை நீங்கள் சரிசெய்து கொள்ளலாம் இருபது ரூபாய் தான் செலவாகும். அதற்காக உங்களுக்கு இருபத்தைந்து ரூபாய் பணம் இத்துடன் அனுப்பியிருக்கிறோம்’’ என்று

வாடிக்கையாளர் –திறுவனம், இருவருக்குமே செலவும் மிச்சம்! நேரமும் மிச்சம்!

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## விடாமுயற்சி!

ஓரிருமுறை முயற்சி செய்து விட்டு, ‘இதற்கு மேல் என்னால் முடியாது ...’ என்று சொல்பவன் சராசரி. ‘என் இலட்சியத்தை எட்டும் வரை முயற்சி செய்து கொண்டேயிருப்பேன்...’என்று சொல்பவன் சாதனையாளன்.

தோல்வியால் துவண்டவர்களை, இந்த உலகம் நினைவில் வைத்திருப்பதில்லை. தோல்வி உங்களுக்கு, புதிய உற்சாகத்தையும், வைராக்கியத்தையும் கொடுக்க வேண்டுமே தவிர, விரக்தியைக் கொடுக்கக் கூடாது. யாருக்கும் முதல் முயற்சியிலேயே, மிகப்பெரிய வெற்றி கிடைத்து விடுவதில்லை.

விடாமுயற்சியால் வரலாற்றில் இடம் பெற்ற சிலரைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

சிறுபிள்ளையாக இருக்கையில் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட வில்மாருடாப என்ற பெண்மணி *1960* ஒலிம்பிக்கில், ஓட்டப் பேட்டியில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்றார். ஐந்து வயதில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட ஷெல்லிமான் 1956 ஒலிம்பிக்கில் நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.

ஒரு ஊருக்குச் செல்வதற்கு பல வழிகள் இருப்பது போல நம்முடைய இலக்கை அடைவதற்கும் பல்வேறு வழிகள் உள்ளன. ஒரு வழி அடைப்பட்டால் மாற்று வழி பற்றி யோசிக்க வேண்டும். மிகப் பிரபலமான விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீனிடம் முட்டாள் தனத்துக்கு விளக்கம் கேட்ட போது “ஒரே வேலையை திரும்பத் திரும்ப ஒரே மாதிரி செய்துவிட்டு வித்தியாசமான பலனை எதிர்பார்ப்பதற்கு பெயர் தான் முட்டாள்தனம் . . . “ என்றாராம்.

அலெக்சாண்டர் கிராகாம் பெல் காது கேளாத தன் மனைவிக்கு காது கேட்பதற்காக கருவி கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது தான் தொலைபேசியைத் தற்செயலாக கண்டுபிடித்தார்.

சாதனையாளர்கள் தங்களுடைய முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்று விடுவதில்லை. தான் இழந்த நாட்டை மீட்கப் போராடிய ராபர்ட் புரூஸ் இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடித்த வாஸ்கோடகாமா எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த எட்மண்ட் ஹிலாரி மற்றும் டென்சிங் போன்ற பலரும் தங்களின் முதல் முயற்சியிலேயே வெற்றி பெறவில்லை. தேசிய கவி பாரதியாரும் கவிஞர் கண்ணதாசனும் தங்களின் ஆரம்பகால கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெறவில்லை.

நேருவுக்கு பின் இந்தியப் பிரதமரான லால்பகதூர் சாஸ்திரி பள்ளிக்குச் செல்வதற்கு தினமும் ஆற்றைக் கடந்து செல்ல வேண்டியிருக்கும். ஆற்றின் குறுக்கே பாலம் இல்லாததால் புத்தகத்தையும் கழற்றிய உடையையும் தலைக்கு மேல் சுமந்தபடி நீச்சலடித்து தினமும் அக்கரையை அடைந்திருக்கிறார். முன்னாள் ஜனாதிபதி

Contd...3

## தெரிந்து கொள்வோம்

### செம்பருத்தி பூ

தினமும் மூன்று செம்பருத்திப் பூக்களை நீரில் கொதிக்க வைத்து கிடைக்கும் கஷாயத்தை நாற்பது நாட்கள் பருகிவர இருதயத்தின் வலிமை –இயங்கும் சக்தி அதிகரிக்கும் நெஞ்சில் இடது பக்க வலி மாரடைப்பு நோய் உள்ளவர்களுக்கு அந்நோய்களிலிருந்து விடுபட்டு பூரண குணமடையும்.

ரத்த சோகை இதயச் சோர்வு, இதய படபடப்பு ஆகிய கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செம்பருத்தி பூ தலை சிறந்த மருந்தாகும். மருத்துவரை அணுகி தினமும் மாத்திரை மருந்து சாப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்றாகிவிடும். செம்பருத்தி பூ கஷாயத்தை பெரியவர்கள் மட்டுமன்றி வளரும் குழந்தைகளும் அருந்தலாம்.

இதன் மூலம் ரோஜா போன்று சிவந்த முகம், ஒளி மிகுந்த கண்கள், அழகிய நகங்கள் தோன்றும் செம்பருத்தி பூவினை இரத்த ஊற்று என்றே அழைக்கலாம்.

Compiled By : Mrs. C. Bavani
Administration

### நெல்லிக்காய்

- நெல்லிக்கனியை உண்டு தண்ணீரைக் குடித்தால் அது எப்பேர்பட்ட தண்ணீராக இருந்தாலும் இனிக்கும். இதன் காரணமாகவே கிராமங்களில் கிணற்றுத் தண்ணீர் ருசியாக இல்லாவிட்டால், நெல்லி மரக்கிளையை வெட்டி கிணற்றில் போட்டுவிடுவார்கள். தண்ணீர் இனிப்பாக மாறிவிடும்.
- தினம் ஒரு நெல்லிக்காயை உண்டால் அது தேகத்திற்கு புத்துணர்ச்சியைக் கொடுத்து நாம் இளமையாக இருக்க உதவும் டானிக்காக இருக்கும். தொற்று நோய்கள் எதுவும் தொற்றாது. இருதயம், சிறுநீரகம் பலப்படும்.
- நல்ல சுத்தமான தண்ணீரில் இரண்டு நெல்லிக்காய்களைப் போட்டு ஊறவைத்து அந்தத் தண்ணீரை எடுத்து கண்களை அகல விரித்து கழுவவும். கண்ணுக்குச் சிறந்த மருந்து இது. கண் சிவந்து புண்ணாகுதல் முதலிய வியாதிகளை குணப்படுத்தும்.

Compiled By : Mrs. R. Jayanthi
Purchase

அப்துல் கலாம் அதிகாலையில் வீடு வீடாகச் சென்று பேப்பர் போட்டு பள்ளிக்குச்சென்றிருந்தார். இப்படிச் சொல்ல ஆரம்பித்தால் சுதந்திர இந்தியாவில் அடி மட்டத்திலிருந்து புகழின் உச்சத்தை அடைந்தவர்கள் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

இன்று உலகிலேயே மிகப்பெரிய பணக்காரர்கள் பட்டியலில் முதலிடம் வகிக்கும் பில் கேட்சும் ஆப்பிள் நிறுவனத்தின் மூலம் கம்ப்யூட்டர் மற்றும் செல்போன் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்திய ஸ்டீவ் ஜாப்ஸ் ஆகிய இருவரும் கல்லூரிப் படிப்பைப் பாதியிலேயே விட்டவர்கள். பில்கேட்ஸ் தன் நண்பரோடு வீட்டில் கார் நிறுத்துமிடத்தில் ஆரம்பித்த நிறுவனம் தான் உலகப் புகழ்பெற்ற மைக்ரோசாப்ட்.

தனக்கு நிறைய திறமையிருந்தும் அங்கீகாரம் கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்படுபவர்கள் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். புகழின் உச்சிக்குச் சென்ற பலர் ஆரம்ப காலத்தில் அங்கீகாரம் கிடைக்காமல் போராட நேர்ந்திருந்தது.

ஒரு துறையில் சாதனை படைக்க இளம் மேதையாக இருந்திருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆர்வமும் ஈடுபாடும் திறமையும் உழைப்பும் இருந்தால் எந்த வயதிலும் சாதனை படைக்கலாம். மிகச்சிறந்த சாதனையாளர்கள் துரதிர்ஷவசமாக சறுக்கி விழ நேர்ந்தாலும் அவர்களுடைய தன்னம்பிக்கையும் கம்பீரமும் சற்றும் குறைவதில்லை.

எல்லா தோல்விகளும் அனைவரையும் ஒரே மாதிரி பாதிப்பதில்லை. உதாரணமாக தேர்வு, போட்டி, வியாபாரம் மற்றும் தற்கொலை செய்து கொள்பவர்கள் ஒரு ரகம். ஆனால் அவர்களை விட மோசமான தோல்வியடைந்தவர்கள் "பரவாயில்லை என்றும் இது ஒரு நல்ல பாடம் ..." என்று ஆக்கப்பூர்வமாக எடுத்துக் கொள்பவர்கள் மறு ரகம். நாம் இந்த இரண்டாவது ரகத்தைச் சார்ந்தவராக இருக்கலாம்! எப்போதெல்லாம் பிரச்சனை மற்றும் தோல்வியைச் சந்திக்க நேர்கிறதோ அப்போது இரண்டு கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம் "அதனால் என்ன? அடுத்து என்ன? நல்ல வழி தானாகவே பிறக்கும்.

Compiled By : Mrs. G. KalaiVani
Facilitation

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி XXIV)

### ஐந்து குள்ளர்கள்

இது என்ன பொருள் எதற்கு பயன்படுகிறது?

கடைசியாக இந்த பொருளை/கருவியை எப்போது உபயோகித்தோம்? அடிக்கடி உபயோகிக்கிறோமா? ஆம் எனில் வாரம் ஒரு முறையா, தினசரியா அல்லது ஐந்து நிமிஷத்துக்கு ஒருமுறையா? நிஷமாகவே இந்தப் பொருள் நமது பணியிடத்தில்/அலுவலகத்தில்/சமையலறையில் தேவையா? சற்று தள்ளி ஓர் அலமாரிக்குள் வைத்தால் என்ன நஷ்டம்?

இந்த கேள்விகளுக்குச் சரியான நேர்மையான பதில்களை எழுதி வைத்துக் கொண்டால், நம்மால் பொருள்களைத் தேவையற்றவை என்று ஒதுக்கிவிட முடியும் அல்லது வேறு இடங்களுக்கு மாற்றிவிட முடியும். நாம் 'அவசியம்' என்று தீர்மானிக்கிற விஷயங்களைக்கூட முடிந்தவரை குறைவான எண்ணிக்கையில் வைத்துக்கொள்வது நல்லது. இதற்காக, அவற்றை மூன்று வகைகளாக பிரிக்கவேண்டும்.

Contd…4

## கவிதைகள்

### அருமை! பெருமை!

தாய்மை இன்ப சுமை,
தாய்ப்பால் அமிர்தம்
தாய் மடி நிம்மதியான சுகம்,
தாயன்பு வற்றாத ஜீவநதி
தாய்ப்பாசம் நீறுாற்று,
தாய்மொழி இனிய சுவை
தாய்வீடு ஆனந்த உலகம்,
தாய் மண் நமது உணவகம்
தாய் நாடு போற்றத்தக்கது,
தாயகம் நம் வெகுமதி
தாய்!
வணக்கத்திற்குரிய பொக்கிஷம்!

### மகிழ்ச்சி படிகள்

விழுவதும் எழுவதும் தான்
வாழ்க்கை
ஏன் வீழ்ந்தோம்
எப்படி எழுந்தோம் என்பதை உணர்ந்தாலே
வாழ்வின் மகிழ்ச்சி படிகளில்
நாம் இருப்போம்.

Compiled By : Mrs. S. Devika Sarathkumar
Receptionist

## சிந்தனைக்கு

- உங்களை உங்கள் மூளையால் கையாளுங்கள்!
- மற்றவர்களை உங்கள் இதயத்தால் கையாளுங்கள்!

### உத்வேகமளிக்கும் மந்திரம்

வெற்றியின் இரகசியம், பிற மனிதர்களின் மன உணர்வுகளைசரியாக புரிந்துகொள்வதிலும் மற்றும் அவற்றை விவேகமாக கையாள்வதிலும் அடங்கியிருக்கிறது.

Compiled By : Mr. K. Manivannan
Fib Tec

பணியாளர்கள் மற்றும் பணியாளர்கள்
குடும்பத்தாரிடமிருந்து கவிதைக
கட்டுரைகள்,கதைகள்
வாவேற்கப்படுகிறது. – Edito

உதாரணமாக நமது வீட்டிலேயே ஒவ்வோர் அறையிலும் என்னென்ன பொருள்கள் அவசியம் என்று தீர்மானித்தபின், அவற்றை எங்கே எப்படி வைக்க வேண்டும் என்று முடிவு செய்ய, இப்படி பிரிவினை செய்வது உதவும்.

வகை 1: தினந்தோறும், அதாவது அடிக்கடிப் பயன்படுகிற விஷயங்கள். உதாரணம்: பேஸ்ட், பிரஷ், சோப்பு, சீப்பு, கண்ணாடி, சமையல் பாத்திரங்கள், அரிசி, தொலைக்காட்சி ரிமோட் முதலியவை.

வகை 2: எப்போதாவது, வாரம் ஒருமுறை அல்லது மாதம் ஒருமுறை அல்லது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை என்று பயன்படுகிற விஷயங்கள்.
உதாரணம் : துவைக்கும் இயந்திரம், சாய்வு நாற்காலி, வீடியோ கேமரா, காற்றடிக்கும் பம்ப் இன்னபிற.

வகை 3: அபூர்வமாக, வருஷத்துக்கு ஒருமுறை அல்லது அதை விடக் குறைவாகப் பயன்படுகிற விஷயங்கள்.
உதாரணம் : பழைய டயரிகள், கல்யாண ஆல்பம், பொங்கல் பானை போன்றவை.

இவற்றுள், வகை 1,2 ஆகியவற்றுக்கு உதாரணம் சொல்வது மிகவும் சுலபம். மூன்றாவது வகையைப்பற்றி யோசிப்பதே சிரமமாக இருக்கறதுதானே? அது தான் மனித இயல்பு!

நமக்குச் சொந்தமான எதையும் பயன்படாதது, அநாவசியமானது என்று சொல்லிக் கொள்ள நம்முடைய மனம் ஒப்புவதில்லை. போகட்டும், அநாவசியமானது என்று சொல்லவேண்டாம். மூன்றாம் வகையைச் சேர்ந்தது, அபூர்வமாகப் பயன்படுவது என்று சுற்றி வளைத்துச் சொல்லலாம், இல்லையா?.

இப்படி எல்லாப் பொருள்களையும் வகைப்படுத்தியபின், முதல் வகையைச் சேர்ந்த பொருள்களைச் சட்டென்று கண்ணுக்கு, கைக்குத் தட்டுப்படுகிற பகுதிகளில் வைக்கவேண்டும். ஏனெனில், அவை அடிக்கடிப் பயன்படுகிறவை. அவற்றைத் தேடுவதில் நேரம் வீணாகக் கூடாது.

அடுத்து, இரண்டாம் வகையைச் சேர்ந்த பொருள்களை இப்படி வெளியே வைக்க வேண்டியதில்லை. சீக்கிரத்தில் கைக்குத் தட்டுப்படும்படியான ஓர் அலமாரியில் அல்லது பெட்டிக்குள் போட்டு வைக்கலாம்; உள் அறையில் நகர்த்தி வைக்கலாம்; பரண் விளிம்பில் போட்டு வைக்கலாம்.

அதாவது, இந்தப் பொருள்கள் தேவைப்படும்போது அவை உடனடியாக கைக்குக் கிடைக்காது.

தொடரும்...

## REACTOR & ITS COLOUM – CAUSTIC SODA

